# விதிகள் மற்றும் நிபந்தனைகள் (சகல வியாபார/நிறுவன கணக்குகளின் ஆட்சி)

## உள்ளடக்க அட்டவணை

**விதிமுறைகளின் சமர்ப்பணம்**

**வரைவிலக்கணங்கள்**

1. வியாபாரக் கணக்கு ஆரம்பிப்பதற்கான பிரவேச தகுதி நிபந்தனைகள்
2. வைப்புக்கள்
3. காசோலைப் புத்தகம்
4. பண மீளப்பெறுகைகள்
5. கால அறிக்கைகள்
6. வாடிக்கையாளர் தகவல்களை சேகரித்தல், செயற்படுத்துதல் மற்றும் பகிர்தல்
7. வாடிக்கையாளரின் கடப்பாடுகள்
8. தரவுப் பாதுகாப்பு
9. நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்
10. வரி இணக்கப்பாடு
11. பொது
12. விதிகள் மற்றும் நிபந்தனைகள்
13. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை
14. வலுக்கட்டாய நிலை
15. நொடித்துப்போகும் நடவடிக்கைகள்
16. செயற்படாத கணக்குகள், செயலற்ற தன்மை மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கார்கில்ஸ் பாங்க் லிமிட்டடின் அனைத்து வணிக கணக்குகளையும் நிர்வகிக்கும். (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் ‘‘வங்கி’’, மற்றும் அல்லது கார்கில்ஸ் வங்கி என்று குறிப்பிடப்படும்)

கார்கில்ஸ் பாங்க் லிமிட்டட் என்பது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

கார்கில்ஸ் பாங்க் லிமிட்டட் கணக்கு வைப்பாளர்/கள் (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப கணக்கு வைப்பாளர்/கள்’’, ‘‘நீங்கள்’’, உங்கள்’’ என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் வாரிசு/கள், நிர்வாகிகள், நிறைவேற்றுநர்கள் மற்றும் எவரேனும் சட்டபூர்வ பிரதிநிதியையும் உள்ளடக்கும்) வங்கி அலுவல்கள், முதலீடு, நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், பல்வேறு தன்மையான வர்த்தக அலுவல்கள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும் கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கி குழும அங்கத்தவர்களிடமிருந்து சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்பாடல் செய்வதற்கும் இடமளிக்கும் வகையில், கார்கில்ஸ் பாங்க் லிமிட்டட் (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் “கார்கில்ஸ் வங்கி”, ‘‘வங்கி’’, ‘‘நாம்’’, ‘‘எமது’’ என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் அதன் அடுத்துறுனர்கள் மற்றும் சாட்டுனர்களையும் உள்ளடக்கும்) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, காலத்திற்குக் காலம் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்களை வழங்கும்.

கணக்கு வைப்பாளர்/கள் பயன்படுத்தும் அல்லது எம்மிடம் கோரும் அல்லது நாம் அவருக்கு/அவர்களுக்கு வழங்கும் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் (கீழே குறித்துரைக்கப்படவிருக்கும்) இந்த விதிகள் விளக்கிக்கூறுகின்றன.

மேலே “கார்கில்ஸ் வங்கி” எனவும் கணக்கு வைப்பாளர்/கள்’’ எனவும் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் இனிமேல் சில சந்தர்ப்பங்களில் இந்த ஒப்பந்தத்தின் ‘‘தரப்புக்கள்’’ என்று கூட்டாகவும் ‘‘தரப்பு’’ என்று தனித்தனியாகவும் பயன்படுத்தப்படலாம்.

கணக்கு வைத்திருப்பவர்/கள் இங்குள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் முற்றிலும் சமமாக பிணைக்கப்படுரவார்கள். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நிபந்தனைகளின் பிரதி வங்கியின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.cargillsbank.comஇல் அல்லது வங்கியின் எந்தவொரு கிளை அலுவலகத்திலிருந்தும் கோரிக்கையின் பேரில் கிடைக்கும். இது கணக்கு வைத்திருப்பவருக்கு/களுக்கு அறிவிப்பு கொடுப்பதாகக் கருதப்படும்.

**விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பணிந்தொழுகள்**

நான்/நாம் விதி மற்றும் நிபந்தனைகளைப் முழுமையாகப் படித்து புரிந்துகொண்டேன்/டோம் என்பதையும், நான்/நாம் அங்குள்ள கடமைகள் பொறுப்புகள் மற்றும் உரிமைகள் பற்றி அறிந்திருப்பதையும் மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதையும் நான்/நாம் ஒப்புக்கொள்கிறேன்/றோம்.

…………………………………………………….… ………………………………………………..

**விதிமுறைகளின் சமர்ப்பணம்**

- ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளவை பன்மை அர்த்தத்தையும் (மற்றும் நேர்மாறாகவும்) பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒருமை அர்த்தத்தையும் உள்ளடக்கும்.
- நீங்கள்'', ''உங்களது'' ''அவர்கள்'' என்னும் பதங்களை அல்லது அவற்றையொத்த குறிப்புப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்துதலானது, பொருத்தமான முறையிலும், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்கும் பட்சத்திலும் கணக்கு வைத்திருப்பவரை குறிக்கும். ஆண்பாலிலான எல்லாக் குறிப்பீடுகளும் பெண்பாலையும் உள்ளடக்கும்.
- இங்கு வழங்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்து பொது பயன்பாடுகளுக்கும் கூடுதலாக கார்கில்ஸ் வங்கியின் சேமிப்பு, நடைமுறை மற்றும் காலவைப்புத் தொகையின் அனைத்து வியாபார கணக்குகளையும் நிர்வகிக்கும்.
- இங்கு உள்ளடக்கப்படாத வங்கி வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வங்கியின் கிளைகளில் கேட்டுப் பெறலாம்.

**வரைவிலக்கணங்கள்**

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பதங்கள், சந்தர்ப்பத்தினால் வேறு விதமாக தேவைப்படுத்தப்படாவிடின், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

- **"கணக்கு/கள்"** என்பது சேமிப்பு, நடைமுறை மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளுக்கு மட்டும் வரையறுக்கப்படாமல், கூட்டாக எந்தவொரு வியாபாரக் கணக்கையும் குறிக்கும்.
- **"கணக்கு வைத்திருப்பவர்/கள்"** என்பது வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையுடைய கம்பனிகளை அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு நிறுவனங்களை/ அமைப்புக்களைக் குறிக்கும்.
- **"விண்ணப்பம்"** என்பது வங்கியினால் வழங்கப்படும் ஒரு வங்கி வசதி அல்லது சேவை தொடர்பில் வாடிக்கையாளரினால் நிரப்பப்படும் விண்ணப்பப் படிவத்தின் அல்லது ஆணையளிப்பின் ஏதேனும் அச்சுப் பிரதியை அல்லது இலத்திரனியல் பிரதியைக் குறிக்கும்.
- **"அதிகார அமைப்பு/கள்"** என்பது கார்கில்ஸ் வங்கியின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் நீதித்துறை, நிர்வாக அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்பு, ஏதேனும் அரசாங்கம் அல்லது அரசாங்க முகவரகம், கருவியகம் அல்லது அதிகார சபை, ஏதேனும் வரி அதிகார சபை, பிணையங்கள் பரிவர்த்தனை, நீதிமன்றம், மத்திய வங்கி அல்லது சட்ட அமுலாக்க அமைப்பு அல்லது அவற்றின் ஏதேனுமொரு முகவரகத்தைக் குறிக்கும்.

- வங்கி என்பது கார்கில்ஸ் வங்கியைக் குறிக்கும்.
- **"வங்கிச் சேவை நாள்" / "வழமையான வங்கிச் சேவை நேரம்"** மற்றும் **"வேலை நாள்/நேரம்"** என்பன, எம்மால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், வங்கிச் சேவை/வேலை நாள் ஒன்றையும் வழமையான வங்கிச் சேவை/வேலை நேரத்தையும் குறிக்கும்.
- **"கார்கில்ஸ் வங்கி லிமிட்டட்"/ "கார்கில்ஸ் வங்கி"/"வங்கி"** என்பது இலங்கை மத்திய வங்கியின் நியாயாதிக்கத்தின் கீழ் முறைப்படி கூட்டிணைக்கப்பட்டதும் இல.696, காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதும் இலங்கையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதுமான வங்கியைக் குறிக்கும்.
- **"இணக்கக் கடப்பாடுகள்"** என்பது பின்வருவனவற்றிற்குப் பணிந்தொழுக கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவர் கொண்டுள்ள கடப்பாடுகளைக் குறிக்கும்:
  (a) பொருத்தமான ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நியதி, சட்டம், பிரமாணம், கட்டளைச்சட்டம், விதி, தீர்ப்பு, ஆணை, தன்னார்வக் குறிப்புரை, பணிப்புரை, தடையுத்தரவு, நீதிமன்றக் கட்டளை, முடக்கல் கட்டளை கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கும் அதிகார சபை ஒன்றிற்கும் இடையிலான ஒப்பந்தம், கார்கில்ஸ் வங்கிக்கு அல்லது கார்கில்ஸ் வங்கியின் குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குப் பிரயோகிக்கக்கூடிய விதத்தில் அதிகார சபைகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை ("சட்டங்கள்"), அல்லது சர்வதேச வழிகாட்டுதல்கள் மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள் அல்லது நடைமுறைகள். (b) அதிகார அமைப்புகளினால் கோரப்படும் ஏதேனும் (நியாயமான) அறிக்கையிடல், ஒழுங்குபடுத்தல் வர்த்தக அறிக்கையிடல், வெளிப்படுத்தல் கோரிக்கைகள் மற்றும் சட்டப்படியான ஏனைய கடப்பாடுகள். (c) எமது வாடிக்கையாளர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கு கார்கில்ஸ் வங்கியின் தேவைப்படுத்தும் சட்டங்கள்.
- **"இரகசியத் தகவல்கள்"** என்பது வாடிக்கையாளர் தகவலை வெளியிடும்போது இரகசியமானது என்று குறிப்பிடும் தகவல்களை அல்லது நியாயமான ஒருவரினால் இரகசியமானது, பகிரங்கமற்றது மற்றும் தனிப்பட்ட தன்மையுடையது என்று கருதப்படும் தகவல்களைக் குறிக்கும்.
- **"இணைக்கப்பட்ட நபர்"** என்பது சேவைகளின் வழங்கல் தொடர்பாக கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வாடிக்கையாளரினால் வழங்கப்படும் வேறு வழியில் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களுக்குரிய (இதில் தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உள்ளடங்கும்) ஒரு நபரை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும். வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில், இணைக்கப்பட்ட

நபர் என்பது (வாடிக்கையாளரின்) எவரேனுமொரு பிணையாளி, கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது அதிகாரி, பங்காளித்துவத்தின் பங்காளிகள் அல்லது உறுப்பினர்கள், "கணிசமான உரிமையாளர்", "கட்டுப்படுத்தும் நபர்", அல்லது பயனடையும் உரிமையாளர், அறக்காவலர், நம்பிக்கைப் பொறுப்பொன்றின் தீர்ப்பனவாளர் அல்லது பாதுகாவலர், குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றை வைத்திருப்பவர், குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவொன்றைச் செலுத்துபவர், வாடிக்கையாளரின் பிரதிநிதி, முகவர் அல்லது நியமத்தர், அல்லது வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கியுடன் கொண்டிருக்கும் வங்கி உறவுகள் தொடர்பாக வாடிக்கையாளருடன் தொடர்புகளை வைத்திருக்கும் வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களையும் உள்ளடக்கலாம்.

- **"கட்டுப்படுத்தும் நபர்கள்"** என்பது பொதுவாக ஒரு நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் நபர்களைக் குறிக்கும். (நம்பிக்கைப் பொறுப்பகம் ஒன்றைப் பொறுத்தவரையில் அதன் தீர்ப்பனவாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர், பாதுகாவலர், பயனடைபவர் அல்லது பயனடையும் பிரிவினர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பகத்தின் மீது தீர்க்கமான இறுதிக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் வேறேதும் நபர்கள் இதில் உள்ளடங்குவர். நம்பிக்கைப் பொறுப்பகம் அல்லாத ஒரு சட்டபூர்வ நிறுவனமாயின், சமமான அல்லது ஒத்தியல்பான கட்டுப்பாட்டு நிலையில் உள்ளவர்களை இச் சொற்றொடர் குறிக்கும்).
- **"வாடிக்கையாளர்கள்"** என்பது வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையுடைய கம்பனிகளை அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு நிறுவனங்களை/அமைப்புக்களைக் குறிக்கும்.
- **"வாடிக்கையாளர் தகவல்"** என்பது வாடிக்கையாளரின் அல்லது இணைக்கப்பட்ட நபரின் தனிப்பட்ட விபரங்கள், இரகசியத் தகவல்கள் மற்றும்/அல்லது வரித் தகவல்களைக் குறிக்கும் (இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் இதில் உள்ளடங்கும்).
- **"நிதிசார் குற்றம்"** என்பது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல், இலஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு, மோசடி, பொருளாதார அல்லது வர்த்தகத் தடைகளை மீறுதல் மற்றும்/அல்லது இந்த விடயங்கள் தொடர்பான சட்டங்கள் அல்லது பிரமாணங்களை மீறுதல் அல்லது மீறுவதற்குத் தந்திரமாக முயற்சி செய்தல் என்பவற்றைக் குறிக்கும்.
- **"இழப்பு"** என்பது ஏதேனும் உரிமைக் கோரல், அறவீடு, செலவு (ஏதேனும் சட்ட மற்றும் நிபுணத்துவ சேவைக்கான செலவுகளும் உள்ளடங்கும்), சேதங்கள், கடன், செலவினம், வரி, பொறுப்புக்கள், கடப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள், வழக்கு, நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு விசாரணை அல்லது தீர்ப்புக்களைக் குறிக்கும். இவை எவ்வாறு கணிக்கப்பட்டவையாகவும் நேரடியாக அல்லது நேரடியற்ற

முறையில், எதிர்விளைவாக, தண்டனையாக அல்லது தற்செயலாக ஏற்பட்டவையாகவும் இருக்கலாம்.

- **"தனிப்பட்ட விபரங்கள்"** என்பது ஒரு நபரை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய வகையில் அந்த நபர் மற்றும் வேறு நிறுவனங்கள் தொடர்பான விபரங்களைக் குறிக்கும். இந்த விபரங்களுள் பெயர்/கள், வசிப்பிட முகவரி/கள், தொடர்பு விபரங்கள், வயது, பிறந்த திகதி, தேசிய இனம், பிரஜாவுரிமை, விவாக நிலை போன்றவையும் உள்ளடங்கும்.
- **"சேவைகள்"** என்பது, வரையறைகள் எதுவுமின்றி (a) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்துதல் மற்றும் மூடுதல், (b) வாடிக்கையாளருக்குக் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வங்கி வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் (பிணையங்களின் கையாளுகை, முதலீட்டு ஆலோசனை, தரகு, முகவர், பாதுகாவலர், கிளியரிங் அல்லது தொழில்நுட்பக் கொள்முதல் சேவைகளும் இதில் உள்ளடங்கும்), விண்ணப்பங்களைப் பரிசீலித்தல், துணைக் கடன் மதிப்பீடு மற்றும் வங்கி வசதிக்கான தகுதி மதிப்பீடு, (c) சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு, காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்கள் என்பன உள்ளடங்கலாக வாடிக்கையாளருடனான கார்கில்ஸ் வங்கியின் ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.
- **"கணிசமான உரிமையாளர்கள்"** என்பது ஒரு நிறுவனத்தில் 10%க்கு மேற்பட்ட இலாபத்திற்கான உரிமையை அல்லது 10%க்கு மேற்பட்ட பங்கை நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் கொண்டுள்ளவர்களைக் குறிக்கும்.
- **"வரி அதிகார அமைப்புகள்"** என்பது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரி, வருமான, நிதி மற்றும் நாணய அதிகார அமைப்புகளைக் குறிக்கும்.
- **"வரித் தகவல்கள்"** என்பது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் ஏதேனும் வரி அதிகார சபைக்கான தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு (அல்லது பணிந்துதொழுகலை நிரூபிப்பதற்கு அல்லது பணிந்தொழுகாமையைத் தவிர்ப்பதற்கு) அவசியமென கார்கில்ஸ் வங்கி நியாயமான முறையில் கருதும் விதத்தில் வாடிக்கையாளரின் (அந்த வாடிக்கையாளர் ஒரு தனிநபராக, வியாபாரமாக அல்லது இலாபம் கருதாத அல்லது வேறு வகையான நிறுவனமாக இருக்கலாம்), அல்லது வாடிக்கையாளர் ஒருவரின் எவரேனும் உரிமையாளரின், "கட்டுப்படுத்தும் நபரின்", "கணிசமான உரிமையாளரின்", பயனடையும் உரிமையாளரின் வரி நிலைமையுடன் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் தொடர்புடைய ஏதேனும் ஆவணங்கள் அல்லது தகவல்களைக் (அத்துடன் இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள்

மற்றும் ஒப்புதல்களும் உள்ளடங்கும்) குறிக்கும். “வரித் தகவல்கள்” என்பதில் வரி வசிப்பிடம் மற்றும்/அல்லது நிறுவனத்தின் அமைவிடம் (பொருத்தமான முறையில்), வரி வாழிடம், வரி அடையாள இலக்கம், வரிச் சான்றிதழ் படிவங்கள், சில தனிப்பட்ட தரவுகள் (பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்) வயது, பிறந்த திகதி, பிறந்த இடம், தேசிய இனம், பிரஜாவுரிமை) என்பனவும் உள்ளடங்கும்.

- **“வரிச் சான்றிதழ் படிவங்கள்”** என்பது கணக்கு வைத்திருப்பவரின் அல்லது நிறுவனதொன்றின் இணைக்கப்பட்ட நபரின் வரி நிலைமையை ஊர்ஜிதம் செய்வதற்காக, காலத்திற்குக் காலம், வரி அதிகார சபை ஒன்றினால் அல்லது கார்கில்ஸ் வங்கியினால் வழங்கப்படும் அல்லது தேவைப்படுத்தப்படும் ஏதேனும் படிவங்களை அல்லது வேறு ஆவணங்களைக் குறிக்கும்.

பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் **கார்கில்ஸ் வங்கியின்** சகல வியாபாரக் கணக்குகளையும் ஆட்சிசெய்யும்:

## 1. வியாபாரக் கணக்கு ஆரம்பிப்பதற்கான பிரவேச தகுதி நிபந்தனைகள்

**1.1** சேமிப்பு, நடைமுறை மற்றும் நிலையான வைப்புக் கணக்குகள் (கூட்டாகக் கணக்கு/கள் என்று குறிப்பிடப்படும்) உள்ளடங்கலான ஒரு வியாபாரக் கணக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையுடைய கம்பனிகளின் அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு நிறுவனங்களின்/அமைப்புக்களின் பெயரில் ஆரம்பிக்கப்படலாம். (இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மேற்குறிப்பிட்ட ‘‘கணக்கு வைத்திருப்பவர்/கள் மற்றும்/அல்லது வாடிக்கையாளர்/கள்’’ என்று குறிப்பிடப்படலாம்).

**1.2** கணக்கானது ஒரு நடைமுறைக் கணக்காக இருக்கும் பட்சத்தில், மேலே சரத்து 1.1இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள், உரிய கணக்கு ஆரம்ப விண்ணப்பத்தையும் ஆரம்பிக்கப்படும் கணக்கு வகைக்குப் பொருத்தமான ஏனைய சட்ட மற்றும் சான்று ஆவணங்களையும், தேவைப்படின், அறிமுகக் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**1.3** வங்கியானது நம்பிக்கைப் பொறுப்பகங்களை அங்கீகரிப்பதில்லை. எனினும், அசாதாரணமான சந்தர்ப்பங்களில், வங்கியின் பூரண தற்றுணிபிற்கேற்ப, நம்பிக்கைப் பொறுப்பகங்களின் பேரில் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்படலாம்.

**1.4** ஒவ்வொரு கணக்கிற்கும் ‘‘கணக்கு இலக்கம்’’ என்று அழைக்கப்படும் ஒரு தனித்துவமான இலக்கம் வழங்கப்படும். வங்கியுடனான சகல தொடர்பாடல்களிலும் சகல நிதி (வைப்பு, பரிமாற்றம், விசாரணை, கொடுப்பனவுச் சீட்டுகள் மற்றும் மீளப்பெறுதல் படிவங்கள்) மற்றும் நிதி சாராத கொடுக்கல் வாங்கல் ஆவணங்களிலும் இந்த இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.

**1.5** கணக்கிற்குரிய ஒரு தரப்பு (கணக்கு வைத்திருப்பவரின் பணிப்பாளர்/பிரதான பங்குதாரா/ இறுதியில் பயனடையும் உரிமையாளர்) இராஜினாமாச் செய்யும் மற்றும்/அல்லது மரணமடையும் பட்சத்தில், கணக்கின் அதிகாரபூர்வ

கையொப்பதாரர்/கையொப்பதாரர்கள் அத்தகைய சூழ்நிலையை ஏற்பட்டிருப்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் தேவையான ஆவணங்களுடன் வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

**1.6** வங்கிக்கு ஏதேனும் பொறுப்புக்களைக் கொண்ட ஏதேனும் கணக்குகளை, அப் பொறுப்புக்கள் உண்மையானவையாக அல்லது எதேச்சையாளவையாக, பிரதானமானவையாக அல்லது துணையானவையாக, தனித்தனியானவையாக அல்லது கூட்டானவையாக இருந்தாலும், ஒன்று சேர்த்து அல்லது ஒருங்கிணைத்து, அவற்றிலுள்ள பணத் தொகைகளை அல்லது வேறேதும் கணக்கின் பேரில் வங்கியிடமிருந்து கணக்கு வைப்பாளருக்கு வருமதியாகவுள்ள வேறேதும் பணத் தொகைகளை முன்னறிவித்தல் கொடுக்காமலே எதிரீடு செய்ய அல்லது இடமாற்றம் செய்ய வங்கிக்கு உரிமையுண்டு.

**1.7** வங்கியின் தற்றுணிபின் பேரிலும் இழப்பெதிர்காப்பு பெறப்படுவதற்கு உட்பட்ட வகையிலும், வங்கிக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கும் செய்துகொள்ளப்பட்ட குறிப்பான ஒப்பந்தம் எதுவும் இல்லாத பட்சத்தில், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் அல்லது வேறேதும் இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை வங்கி ஏற்றுக்கொள்ள மாட்டாது.

**1.8** கணக்கு நடைமுறைக்கணக்காக இருக்கும் பட்சத்தில் கணக்கின் கடன் நிலுவைகளுக்கு வங்கியால் வட்டி செலுத்தப்பட மாட்டாது.

## 2. வைப்புக்கள்

**2.1** எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஒரு கணக்கிற்குத் தேவையான ஆரம்ப வைப்புத்தொகையை வங்கி தனது விருப்பப்படி மாற்றலாம், இது விதி 11.5 க்கு உட்பட்டது வங்கி தனது விருப்பப்படி குறைந்த ஆரம்ப வைப்புகளுடன் கணக்கு/களைத் திறக்கலாம்.

**2.2** வங்கியின் பெயரில் எழுதப்படாத வரைவுகள் மற்றும்/அல்லது ஏனைய கொடுப்பனவுக் கட்டளைகளைக் கொள்வனவு செய்வதா அல்லது சேகரிப்பின் பேரில் அனுப்புவதா என்பதை வங்கி தனது தற்றுணிபின் அடிப்படையில் தீர்மானிக்கும். செலுத்துகின்ற வங்கியானது, அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பத்திரங்களை நிராகரிக்கும் பட்சத்தில், பூரண மறுவழியுரிமையை (விதிப்பனவுகள் உட்பட) வங்கி வைத்திருக்கும். நிராகரிப்பு பற்றிய அறிவித்தல் கிடைத்ததும் கணக்கில் பற்று வைக்கப்படும்.

**2.3** வங்கியின் பேரில் வரையப்பட்ட வரைவுகள்/காசோலைகள் வங்கியின் கணக்கொன்றில் வரவு வைப்பதற்காகச் செலுத்தப்படும்போது, வங்கியானது, அதன் வெளியிடப்பட்ட இறுப்பனவுப் பட்டியலுக்கிணங்க விதிப்பனவுகளைக் கழித்துக்கொள்ளும். வங்கியின் பெயரில் எழுதப்படாத வரைவுகள்/காசோலைகள் கொள்வனவு செய்யப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்படும்போது, வரைவின்/ காசோலையின் முகப்பெறுமதியிலிருந்து கையாளுகைக் கட்டணங்களையும் கழிவு அறவீடுகளையும் வங்கி கழித்துக்கொள்ளும்.

**2.4** கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு வரவு வைக்கப்படும் ஏனைய வங்கிகளின் காசோலைகளுக்கான பணத்தை, அத்தகைய காசோலைகள் தேறிய பின்பு மாத்திரமே மீளப்பெற முடியும். ஏனைய வங்கிகளின் பெயரில் எழுதப்பட்டு தீர்வுக்காக அல்லது சேகரிப்பிற்காக வைப்புச் செய்யப்படும் காசோலைகள், லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டட்டின் விதிகளுக்கும், காலத்திற்குக் காலம் அவற்றிற்குச் செய்யப்படக்கூடிய திருத்தங்களுக்கும் அமைவாக இருக்கும். பெறுநர் வங்கிகளினால் அறவிடப்படும் ஏதேனும் தரகுப்பணங்கள், வங்கியின் பூரண தற்றுணியின் பேரில், மேலதிக கட்டணத்துடன் அல்லது மேலதிக கட்டணம் இல்லாமல் சம்பந்தப்பட்ட நடைமுறைக் கணக்குகளில் பற்று வைக்கப்படும்.

2.5 பணம் அல்லாத வைப்புகளைப் பொறுத்தவரையில், அவற்றிற்கான பூரண சட்ட உரிமை உங்களுக்கு உள்ளது என்பதை நீங்கள் பிரதிநிதித்துவம் செய்து உத்தரவாதப்படுத்த வேண்டும். அத்துடன், அத்தகைய பணம் அல்லாத வைப்புகளின் உண்மைத் தன்மை, செல்லுபடியாகும் தன்மை, கையொப்பத்தின் சரியான தன்மை, அவற்றில் எழுதப்பட்டுள்ள குறிப்புகள் மற்றும் விபரங்களுக்கு நீங்கள் முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

**2.5** கணக்கு வைத்திருப்பவர் தான் விரும்பும் எத்தனை தடவைகளும் கணக்கில் வைப்புக்களைச் செய்ய முடியும். வங்கியின் டெலர் கருமபீடங்களில் செய்யப்படும் சகல வைப்புகளும் வைப்புச் சீட்டின் உறுதிப்படுத்தல் பதிவு மூலம் அல்லது அதிகாரம் பெற்ற வங்கி அலுவலர் ஒருவர் வைப்புச் சீட்டில் இடும் கையொப்பத்தின் மூலம் வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**2.6** கணக்கு வைத்திருப்பவர் தான் விரும்பும் எத்தனை தடவைகளும் கணக்கில் வைப்புக்களைச் செய்ய முடியும். வங்கியின் டெலர் கருமபீடங்களில் செய்யப்படும் சகல வைப்புகளும் வைப்புச் சீட்டின் உறுதிப்படுத்தல் பதிவு மூலம் அல்லது அதிகாரம் பெற்ற வங்கி அலுவலர் ஒருவர் வைப்புச் சீட்டில் இடும் கையொப்பத்தின் மூலம் வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**2.7** வங்கியின் ஒவ்வொரு கிளையினாலும் குறித்துரைக்கப்படும் காலக்கெடு வரை வைப்புச் செய்யப்படும் காசோலைகள், அதே நாளில் அங்கீகரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்படும். காலக்கெடுவுக்குப் பின்னர் வைப்புச் செய்யப்படும் காசோலைகள், அடுத்த வேலை நாளில் அங்கீகரிப்கிற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

**2.8** வங்கியானது, கணக்கில் தவறுதலாக வரவு வைக்குமாயின், எந்தச் சந்தர்ப்பத்திலும் அப் பதிவை நேர்மாற்றம் செய்வதற்கு மற்றும்/அல்லது அத் தொகையை கணக்கில் பற்று வைக்க மற்றும்/அல்லது வாடிக்கையாளரிடமிருந்து கோருவதற்கு உரிமை கொண்டுள்ளது.

**2.9** கணக்கு வைத்திருப்பவரின் செல்வ மூலம் மற்றும்/அல்லது நிதிகளின் மூலம் தொடர்பாக வங்கியானது அதன் தனித் தற்றுணிபிற்கேற்பத் தகவல்களைக்

கோரக்கூடும். அத்தகைய தகவல்களின் உறுதிப்படுத்தலும் இதில் அடங்கியிருக்கும்.

## 3. காசோலைப் புத்தகம்

3.1 ரூபாய் நடைமுறை கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) வேண்டுகோள் மீது காந்த மை அடையாளத்துடன் பதிப்பித்த காசோலைப் புத்தகம்(கள்) விநியோகிக்கப்படும். அரசாங்க முத்திரைக் கட்டணம் ஏதும் நடைமுறையில் இருப்பின் அதனையும் காசோலைப் புத்தகத்தை அச்சிடுவதற்கான செலவையும் உள்ளடக்கிய கட்டணங்கள் இந்தப் புத்தகங்களின் விநியோகத்துக்காக கணக்கு வைப்பாளரிமிருந்து அறிவிடப்படும்.

3.2 காசோலைப் புத்தகத்திற்கான வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதும், வங்கியானது தனது பதிவேட்டிலுள்ள கணக்கு வைப்பாளா்/களுக்கு அல்லது நியமிக்கப்பட்டவருக்கு (முன்னர் பரிந்துரைக்கப்பட்ட) அல்லது முகவரிக்கு அக் காசோலைப் புத்தகத்தைத் தபால் மூலம் அனுப்பிவைக்கும். அத்தகைய ஏதேனும் விநியோக முறை காரணமாக ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்பிற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

3.3 ஒரு புதிய காசோலைப் புத்தகம் கிடைத்தவுடன் அதன்மீது பதிப்பிடப்பட்ட தொடர் இலக்கங்கள், கணக்கு இலக்கம் மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவா்களின்) பெயர்(கள்) என்பவற்றையும், காசோலைகளின் எண்ணிக்கையையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். எவையேனும் ஒழுங்கீனங்கள் இருப்பின் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

3.4 கணக்கு வைப்பாளா் காசோலைகளை வரைவதற்கு முன்னா், காசோலைப் புத்தக அட்டையின் உட்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளை வாசிக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கும், காலத்திற்குக் காலம் கொண்டுவரப்படும் திருத்தங்களுக்கும் கணக்கு வைப்பாளா் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

3.5 கணக்கு வைப்பாளா் வங்கிக்கு வழங்கிய ஆணையளிப்பு மற்றும் மாதிரிக் கையொப்பத்திற்கு (கையொப்பங்கள்) இணங்கவே காசோலைகளில் கையொப்பமிடுதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கையொப்பத்தில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெறின், கணக்கு வைப்பாளா் அது பற்றி உடனடியாக எழுத்துமூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

3.6 மோசடியான மாற்றங்களுக்கு இடமளிக்கும் வகையில் அல்லது வங்கியைத் தவறான வழியில் இட்டுச்செல்லும் அல்லது திசைதிருப்பும் முறையில் காசோலைகள் எழுதப்படக் கூடாது.

3.7 காசோலைகள் வங்கியினால் வழங்கப்பட்ட காசோலைத் தாள்களில் மாத்திரம் நிரந்தர மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு திருத்தமும் காசோலை வரைபவரின் முழுக் கையொப்பத்தினால் ஊா்ஜிதம் செய்யப்பட வேண்டும். இலகுவில்

கண்டுபிடிக்க முடியாத திருத்தங்களின் விளைவினால் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது என்பதைக் கணக்கு வைப்பாளர் ஏற்றுக்கொள்கிறார்.

**3.8** காசோலைத் தாள்கள் காணாமற்போனால்/களவாடப்பட்டால் அல்லது தவறான இடத்தில் வைக்கப்பட்டால், கணக்கு வைத்திருப்பவர் தனது காசோலை இலக்கம், கணக்கிலக்கம், திகதி, தொகை மற்றும் பணம் பெறுபவரின் பெயர் என்பவற்றைக் கொடுத்து, கொடுப்பனவை நிறுத்தும்படி எழுத்தில் வங்கிக்கு உடனடியாக அறிவுறுத்துதல் விடுத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட காசோலை/கள், அத்தகைய அறிவுறுத்துதல் பெறப்பட்ட நேரம் வரை செலுத்தப்பட்டிருக்காவிட்டால் மட்டுமே அத்தகைய எல்லா அறிவுறுத்துதல்களும் பயனுடையனவாகவிருக்கும். கொடுப்பனவை நிறுத்தும்படி தொலைபேசி மூலம் கொடுக்கப்பட்ட அறிவுறுத்துதல்கள், 48 மணித்தியாலங்களுக்குள் எழுத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்தகைய எழுத்திலான அறிவுறுத்துதல்கள் 48 மணித்தியாலங்களுக்குள் வங்கியினால் பெறப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவருக்கான ஏதேனும் அறிவித்தலின்றி, கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்துதலை இல்லாதாக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. 48 மணித்தியாலங்களுக்குள் கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் எழுத்தில் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவு நிறுத்த அறிவுறுத்தலை செயற்படுத்தாமைக்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

**3.9** காசோலை புத்தகங்கள் பயன்பாட்டில் இல்லாதபோது பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படுவதை கணக்கு வைத்திருப்பவர்/கள் உறுதிப்படுத்த வேண்டும்.

4. **மீளப்பெறுகைகள்**

**4.1** வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட விசேட முன்னேற்பாடுகள் இல்லாமல், கணக்கு வைத்திருப்பவர் தனது கணக்கில் மேலதிகப் பற்றை பெற முடியாது. போதியளவு பணம் கணக்கில் இல்லாத சந்தர்ப்பத்தில் காசோலைகளை நிராகரிப்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. மேலும், மறுக்கப்பட்ட காசோலைக்காக ஒரு கட்டணத்தை கணக்கு வைப்பாளரிடமிருந்து அறவிடும் உரிமையும் வங்கிக்கு உள்ளது. காசோலையின்/களின் மேலதிகப் பற்றுக்கு வங்கி தனது தற்றுணிபின் பேரில் அனுமதிக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கேட்கின்றபோது நிபந்தனையின்றி வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பவற்றுடன் மேலதிகமாகப் பெற்ற தொகையை மீளச் செலுத்துத்தும் கடப்பாடு கணக்கு வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவர்களுக்கு) உண்டு. ஏதேனும் மேலதிகப் பற்று வசதியொன்றை வழங்குவதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக வங்கியைப் பிணிக்கின்ற ஓர் ஒப்பந்தமாக இதனைக் கொள்ள முடியாது.

**4.2** சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காலத்துக்குக் காலம் நடைமுறையிலுள்ள சகல அரசாங்க விதிப்பனவுகளும் வரிகளும் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் கணக்கிலிருந்து அறவிடப்படும். சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதன் விளைவாக எழும் கோரிக்கைகளுக்கு அல்லது வாடிக்கையாளரினால் உறப்படும் இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

**4.3** வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க, வங்கியானது கொடுப்பனவுக் கட்டளைகளை வழங்கக்கூடும். கொள்வனவுக் கட்டளை ஒன்று வழங்கப்பட்ட பின்னர், அக் கொடுப்பனவுக் கட்டளையின் மூலப்பிரதியும் இழப்பெதிர்காப்புக் கடிதமும் வாடிக்கையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி, அதன் இரத்துச்செய்கை வேண்டுகோளை வங்கி ஏற்றுக்கொள்ள மாட்டாது.

## 5. கால அறிக்கைகள்

**5.1** கணக்கில் இடம்பெறும் சகல கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களும் கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்படும் விபரக்கூற்றில் (காகித மற்றும் மின்னஞ்சல் அறிக்கைகளைக் குறிக்கும்) காட்டப்படும். இந்த விபரக்கூற்றுகள் கணக்கு வைப்பாளர்(கள்) அறிவுறுத்திய கால இடைவெளிகளில், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, வங்கியின் பதிவேடுகளிலுள்ள கணக்கு வைப்பாளர்/களது தபால்/மின்னஞ்சல் முகவரிக்கு (முகவரிகளுக்கு) அனுப்பிவைக்கப்படும்.

**5.2** விபரக்கூற்றுச் சுற்றுவட்டம் முடிவடைந்த திகதியிலிருந்து 10 வேலை நாட்களுக்குள் கணக்கு விபரக்கூற்று கிடைக்காவிட்டால், அது பற்றி வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். வங்கியிடமிருந்து கிடைக்கும் ஒவ்வொரு விபரக்கூற்றையும் கவனமாகப் பரிசீலனை செய்யவும், அதில் போலிப் பதிவு, போலியான கையொப்பம், மோசடி மற்றும் கணக்கு வைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் அல்லது வேறொரு நபரின் அதிகாரமின்மை அல்லது கவனயீனம் உள்ளிட்ட ஏதேனும் காரணத்தினால் அல்லது அவற்றின் விளைவாக தவறுகள், முரண்பாடுகள், அதிகாரமளிக்கப்படாத பற்று வைப்புகள் அல்லது வேறேதும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பதிவுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதை அவதானிக்கவும் கணக்கு வைத்திருப்பவர்/கள் இணங்குகின்றார்/கள். ஏதேனும் தவறுகள் இருப்பின், விபரக்கூற்று கிடைத்த 14 வேலை நாட்களுக்குள் வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். கணக்கு வைத்திருப்பவர்/கள் இந்த மீளாய்வுக் காலத்திற்குள் அவ்வாறு அறிவிக்கத் தவறினால், விபரக்கூற்றும் கணக்கு முறைகேடுகள் உள்ளடங்கலான சகல பதிவுகளும் சரியானவை, பூரணமானவை, அதிகாரமளிக்கப்பட்டவை மற்றும் கணக்கு வைத்திருப்பவரை/வைத்திருப்பவர்களை பிணிப்பவை என்று கருதப்படும்.

இப் பிரிவுக்கு அமைவாக கணக்கு வைத்திருப்பவர்/கள் அறிவித்தல் கொடுத்த கொடுக்கல் வாங்கல்கள் தவிர, சமீபத்திய விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வங்கியானது எல்லாப் பொறுப்புக்களில் இருந்தும் விடுவிக்கப்படும்.

5.3 விபரக்கூற்றுக்களின் பிரதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகும். விபரக்கூற்றுக்களின் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்பட்டால், வங்கியானது அதன் பிரசுரிக்கப்பட்ட கட்டணப் பட்டியலுக்கேற்ப ஒரு கட்டணத்தை அறவிட்டு இச் சேவையை வழங்குவதற்கு உரிமை கொண்டுள்ளது.

## 6. வாடிக்கையாளர் தகவல்களைச் சேகரித்தல், செயற்படுத்துதல் மற்றும் பகிர்ந்துகொள்ளல்

### 6.1 சேகரித்தல்

கார்கில்ஸ் வங்கிக்கு வாடிக்கையாளர் தகவல்களை (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் பயன்படுத்தும் கார்கில்ஸ் வங்கி வசதிகள் மற்றும் சேவைகள், பற்றிய பொருத்தமான தகவல்களும் உள்ளடங்கும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். வாடிக்கையாளர் தகவல்கள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரிடமிருந்து (அல்லது அவரின் சார்பில் செயற்படும் ஒருவரிடமிருந்து) கோரப்படலாம். அல்லது இத் தகவல்கள் கார்கில்ஸ் வங்கியினால் வேறு இடங்களிலிருந்து (பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களும் உட்படும்) சேகரிக்கப்படும் தகவல்களாகவும் இருக்கலாம். கார்கில்ஸ் வங்கிக்கு கிடைக்கும் தகவல்களிலிருந்து உருவாக்கப்பட்ட அல்லது இணைத்துக்கொள்ளப்பட்ட தகவல்களாகவும் அவை இருக்கலாம்.

### 6.2 செயற்படுத்துதல்

கார்கில்ஸ் வங்கி பின்வரும் நோக்கங்கள் தொடர்பில் வாடிக்கையாளர் தகவல்களை செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்: (a) சேவைகளை வழங்குவதற்காகவும் வாடிக்கையாளரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காகவும் (b) பணிந்தொழுகுதல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக. (c) நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக. (d) வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஏதேனும் தொகைகளைச் சேகரிப்பதற்காக. (e) கடன் தகுதியைப் பரிசோதித்து, கடன் சிபாரிசைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக. (f) கார்கில்ஸ் வங்கியின் அல்லது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் உரிமைகளை அமுல் செய்வதற்காக அல்லது பாதுகாப்பதற்காக. (g) கார்கில்ஸ் வங்கியின் அல்லது கார்கில்ஸ் வங்கி

குழுமத்தின் உள்ளகச் செயற்பாட்டுத் தேவைகளுக்காக (கடன் மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்பு அல்லது திட்டம் ஒன்றின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்களும் உள்ளடங்கும்). (h) வாடிக்கையாளருடன் கார்கில்ஸ் வங்கி ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுவதற்காக (வாடிக்கையாளருக்கான சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது தொடர்புடைய வங்கி வசதிகள் மற்றும் சந்தை ஆய்வு போன்றவை). ("நோக்கங்கள்")

**6.3 பகிர்ந்துகொள்ளுதல்**

கார்கில்ஸ் வங்கி அதன் (நோக்கங்களுக்கு அவசியமெனவும் பொருத்தமெனவும் கருதும்) வாடிக்கையாளர் தகவல்களை பின்வரும் பெறுநர்களுக்கு (அவர்களும் தமது நோக்கங்களுக்காக அத் தகவல்களைச் செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்) அனுப்பவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதை வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

a) எவரேனும் உப ஒப்பந்தகாரர்கள், முகவர்கள், சேவை வழங்குநர்கள். (அவர்களின் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள்)

b) வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுபவர்கள், கொடுப்பனவைப் பெறுபவர்கள், பயனடைபவர்கள், கணக்கு நியமத்தர்கள், இடையீட்டாளர்கள், பிரதிநிதித்துவ மற்றும் முகவர் வங்கிகள், கிளியரிங் நிலையங்கள். கிளியரிங் அல்லது தீர்ப்பனவு அமைப்புக்கள், சந்தைப் பங்காளிகள், எதிர்நீரோட்ட இடைநிறுத்தல் முகவரகங்கள், பரிமாற்ற அல்லது வர்த்தக வைப்பகங்கள், பங்குப் பரிவர்த்தனைகள், வாடிக்கையாளருக்கு அக்கறையுள்ள பிணையங்களை கொண்டிருக்கும் கம்பனிகள் (வாடிக்கையாளருக்காக கார்கில்ஸ் வங்கியினால் பிணையங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்).

c) சேவைகளில் அல்லது சேவைகள் தொடர்பில் அக்கறையைப் பெறும் அல்லது இடர் பொறுப்பை ஏற்கும் தரப்பினர்.

d) கடன் சிபாரிசுகளைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக வேறு நிதி நிறுவனங்கள், கடன் சிபாரிசு நிலையங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கணக்காய்வாளர்கள்/வரி ஆலோசகர்கள்.

e) வாடிக்கையாளருக்கு சொத்து முகாமைச் சேவைகளை வழங்கும் எவரேனும் மூன்றாம் தரப்பு நிதி முகாமையாளர்

f) கார்கில்ஸ் வங்கியினால் அறிமுகப்படுத்தல்கள் அல்லது சிபாரிசுகள் வழங்கப்படும் அறிமுகப்படுத்தும் தரகர்

**7. வாடிக்கையாளரின் கடப்பாடுகள்**

**7.1** காலத்திற்குக் காலம் கார்கில்ஸ் வங்கிக்கு வாடிக்கையாளர் வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அதனை உடனடியாக, அல்லது எவ்வாறாயினும் 30 தினங்களுக்குள், எழுத்து மூலம் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவிக்க வாடிக்கையாளர் இணங்குகின்றார். கார்கில்ஸ் வங்கியின் எந்தவொரு கோரிக்கைக்கும் வாடிக்கையாளர் இணங்குகிறார்.

**7.2** இணைக்கப்பட்ட ஒவ்வொரு நபரினதும்/(தனிப்பட்ட தரவுகள் அல்லது வரித் தகவல்கள் உள்ளிட்ட) தகவல்கள் வழங்கப்பட்ட நபர்களினதும் தகவல்களை கார்கில்ஸ் வங்கிக்கு அல்லது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்குவதற்கு முன், அத்தகைய நபருக்கு/நபர்களுக்கு அது பற்றி அறிவித்து, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அத் தகவல்களின் செயற்படுத்தல், வெளிப்படுத்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். இணைக்கப்பட்ட நபர்கள் தமது தனிப்பட்ட தகவல்களைப் பரிசீலிக்கவும், வேண்டுமானால் திருத்தம் செய்யவும், உரிமை கொண்டுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**7.3** பின்வரும் சந்தர்ப்பங்களில்:

கார்கில்ஸ் வங்கி நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை வழங்க ஒரு வாடிக்கையாளர் தவறினால், அல்லது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற்றம் செய்ய அல்லது வெளிப்படுத்த கார்கில்ஸ் வங்கிக்கு தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை வாடிக்கையாளர் இடைநிறுத்தினால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது நிதிசார் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென கார்கில்ஸ் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவர் சந்தேகித்தால் அல்லது நிதிசார் குற்ற இடருக்கான சாத்தியத்தை ஒரு வாடிக்கையாளர் ஏற்படுத்தினால் கார்கில்ஸ் வங்கி ஆனது:

வாடிக்கையாளருக்குப் புதிய சேவையை வழங்க அல்லது தற்போதய சேவைகளில் அனைத்தையும் அல்லது அதிலொரு பகுதியைத் தொடர்ந்து வழங்க முடியாதிருக்கும். வாடிக்கையாளருடன் தனது வியாபார உறவுகளை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உண்டு.

இணக்கப்பாட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்ற கார்கில்ஸ் வங்கி அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்: மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் கணக்கை/கணக்குகளை தடைசெய்ய, இடம்மாற்ற அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்கும்.

**8. தரவுப் பாதுகாப்பு**

**8.1** வாடிக்கையாளர் பற்றிய தகவல்கள் தரவுப் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைவாக உள்நாட்டு நியாயாதிக்கத்தில் செயற்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டில் செயற்படுத்தப்பட்டாலும், கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் அங்கத்துவ நிறுவனங்கள், அவற்றின் ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் கடைப்பிடிக்க வேண்டிய கண்டிப்பான இரகசிய குறியீடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் பாதுகாக்கப்படும்.

**9. நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்**

**9.1** நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், கார்கில்ஸ் வங்கியின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக கார்கில்ஸ் வங்கி பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண தற்றுணிபிற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் ("நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்").அத்தகைய நடவடிக்கைகளுள் (a) வாடிக்கையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், மீளப்பெறும் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவைப் பரிசோதித்தல், இடைமறித்தல் மற்றும் விசாரித்தல், (b) நிதிகளின் மூலவிடம் அல்லது அவற்றின் உத்தேச பெறுநர்கள் பற்றி விசாரித்தல், (c) வாடிக்கையாளர் தகவல்களை கார்கில்ஸ் வங்கியிடமிருக்கும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்தல், மற்றும்/அல்லது (d) சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் மீது தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிவதற்காக அல்லது வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்வதற்காக மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

**9.2** நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை கார்கில்ஸ் வங்கி மேற்கொள்வதால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதல் அல்லது கிளியரிங் செய்யப்படுதல், வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பங்கள் செயற்படுத்தப்படுதல் அல்லது சேவைகளின் முழுமையான அல்லது பகுதியான வழங்கல் என்பன அரிதான சந்தர்ப்பங்களில் கார்கில்ஸ் வங்கியினால் தாமதிக்கப்படலாம், தடைசெய்யப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் இழப்பு ஏற்படுமாயின், அது தொடர்பில், சட்டம்

அனுமதிக்கும் அளவிற்கு, கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு பொறுப்பாளியாகத் தேவையில்லை.

**10. வரி இணக்கப்பாடு**

வரிக் கட்டுப்பாடுகள் எழுகின்ற சகல நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின்/கணக்குகளின் அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பிலும் உங்கள் வரிக் கட்டுப்பாடுகளை (வரிகளைச் செலுத்துதல், வருமான வரிப் படிவங்கள் மற்றும் பொருத்தமான வரிகள் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் இக் கட்டுப்பாடுகளில் உள்ளடங்கும்) புரிந்துகொள்வதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதும் முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பாகும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். ஒவ்வொரு இணைக்கப்பட்ட நபரும், ஓர் இணைக்கப்பட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தனது விடயத்தில் இதே ஒப்புதலை வழங்க வேண்டும். அல்லது வாடிக்கையாளரின் (அல்லது இணைக்கப்பட்ட நபரின்) வாழிட நாடு, வசிப்பிடம், பிராஜாவுரிமை அல்லது கூட்டிணைப்பு என்பவற்றைக் கருத்திற்கெடுக்காத, பிரதேச வரையறையற்ற வரிச் சட்டங்களைச் சில நாடுகள் கொண்டிருக்கலாம். கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரோ வரி ஆலோசனைகளை வழங்குவதில்லை. நீங்கள் சுயாதீன தரப்பினரிடமிருந்து சட்ட மற்றும் வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலாவது ஏற்படக்கூடிய உங்கள் வரிக் கட்டுப்பாடுகள் தொடர்பாக கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கோ எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கி குழுமத்தின் அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின்/கணக்குகளின் அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற கட்டுப்பாடுகளும் இவற்றில் அடங்கும்.

**11. பொது**

11.1 கணக்கின் ஆரம்பப் படிவத்தில் அல்லது வேறு வழியில் வங்கிக்கு வழங்கப்பட்ட சகல தகவல்களும் தமது அறிவுக்கெட்டிய வரை உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை கணக்கு வைத்திருப்பவர்/கள் உறுதிப்படுத்துகின்றார்/ உறுதிப்படுத்துகின்றனர்.

**11.2** கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் வியாபாரம் மேற்கொள்ளப்படும் பிரதான முகவரி அல்லது பதிவு செய்யப்பட்ட முகவரி, தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அது பற்றி உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

**11.3** வங்கிக்கு எழுத்து மூலம் முறையாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு ஏதேனும் அறிவித்தல் அனுப்பப்பட்டால், 7 வேலை நாட்களுக்குள் அது கணக்கு வைப்பாளருக்குக் கிடைத்துவிட்டதாகக் கருதப்படும்.

11.4 விதிப்பனவுகள் பட்டியல்

**11.4.1** வங்கியானது காலத்திற்குக் காலம் தனது தற்றுணிபின் பேரில் பொருத்தமெனக் கருதும் சேவைக் கட்டணங்களை மற்றும்/அல்லது வேறேதும் கட்டணங்களை விதிக்க உரிமை கொண்டுள்ளது.

**11.4.2** வங்கியானது காலத்திற்குக் காலம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி தனது தற்றுணிபிற்கேற்ப பொருத்தமெனக் கருதும் விதத்தில் சேவைக் கட்டணம் மற்றும் அது தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் சேர்க்க, நீக்க அல்லது மாற்றம் செய்ய உரிமை கொண்டுள்ளது. வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலை www.cargillsbank.com என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்வையிடலாம் மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவர்/கள் வங்கியின் ஏதேனுமொரு கிளையில் கேட்டுப் பெறலாம் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்தியின் மூலமும் அது அறிவிக்கப்படலாம். அவ்வாறு வழங்கப்பட்ட அறிவித்தல், கணக்கு வைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கருதப்படும்.

**11.5.** கணக்கில் பேணப்பட வேண்டிய குறைந்தபட்ச மீதித் தொகை ஒன்றை வங்கி அதன் தனித் தற்றுணிபிற்கேற்ப நிர்ணயிக்க முடியும். கணக்கு வைத்திருப்பவர்/கள் இக் குறைந்தபட்ச மீதித் தேவையை அனுசரிக்கத் தவறினால், வங்கியானது கொடுக்கல் வாங்கல் கட்டணம் மற்றும்/அல்லது சேவைக் கட்டணத்தை விதிக்கும்.

**11.6.** வங்கியானது, சகல கணக்குகள் தொடர்பாகவும் விபரக்கூற்றுக்கள், வவுச்சர்கள், மீளப்பெறுகை/வைப்பு சீட்டுக்கள், காசோலைகள் அல்லது ஏனைய கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகள் என்பவற்றின் பிரதிகளை, வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பேணி வைத்திருக்கும். அத்தகைய காலப்பகுதியின் பின்னர் அத்தகைய பதிவேடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் பின்னர், விபரக்கூற்றுக்களின் அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பிரதிகளை வழங்கும் பொறுப்பை அல்லது கடமையை வங்கி ஏற்காது.

**11.7** ரூபாய்/வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் பற்று வைத்துக் கொடுப்பனவுகளைச் செய்யும்படி கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) விடுக்கும் உண்மையான எழுத்துமூல அறிவுறுத்தல்களின் (நிலையான அறிவுறுத்தல்களும் உட்படும்) பேரில்

மட்டுமே வங்கி நடவடிக்கை எடுக்கும். இந்த அறிவுறுத்தல்கள் தபால் மூலம் அல்லது வங்கியின் கிளையொன்றிற்கு வங்கியின் வேலை நேரத்தில் நேரில் கையளிக்கப்படுவதன் மூலம் வழங்கப்படலாம். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய ஓர் அறிவுறுத்தல் செயற்படுத்தப்படாததால் ஏற்படக்கூடிய ஏதேனும் உரிமைக் கோரல்கள், இழப்புகள் அல்லது செலவுகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பாளியாகாது. அதனைப் பொறுப்பாளியாக்கவும் முடியாது. கணக்கு வைப்பாளருக்கும் வங்கிக்குமிடையே பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தம் இல்லாமல் தொலைநகல் அல்லது வேறேதும் இலத்திரனியல் ஊடகம் மூலமான அறிவுறுத்தல்களின் பேரில் வங்கி செயற்படாது.

**11.8** வங்கி தனது தனித் தற்றுணிபின் பேரில் அவ்வாறு செய்தாலன்றி, பண வைப்புகள், பண அல்லது காசோலை மீளப்பெறுகைகள், காசோலை வைப்புக்கள் மற்றும் ஏனைய பற்று/வரவு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வெவ்வேறான கணக்கு தகவல் அறிக்கைகளை வங்கியானது கணக்கு வைப்பாளர்களுக்குத் தபால் மூலம் அனுப்பாது.

**11.9 கணக்குகளை மூடிவிடுதல்**

எவ்வித காரணமும் காட்டாமல் ஏதேனும் ஒரு கணக்கை ஆரம்பிப்பதற்கு மறுக்கவும் கணக்கை மூடிவிடவும் வங்கிக்கு உரிமையுண்டு.

அதேபோன்று, கணக்கு வைப்பாளருக்கு/ளுக்கு அவரது/களது கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு எழுத்துமூல அறிவித்தலைக் கொடுத்துவிட்டு, எவ்வித காரணமும் காட்டாமல் கணக்கை மூடிவிடவும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஒரு கணக்கின் மீதியானது தொடர்ச்சியாக ஆறு (06) மாதங்களுக்கு பூச்சியமாக (0) அல்லது குறைவாக இருக்குமாயின், (அல்லது வங்கியால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் குறைந்த பட்ச கணக்கு மீதி) அக் கணக்கை மூடிவிடுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு ஏழு (07) வேலை நாட்களுக்கு முன் எழுத்துமூல அறிவித்தலைக் கொடுத்துவிட்டு, எவ்வித காரணமும் காட்டாமல் கணக்கை மூடிவிடவும் வங்கிக்கு உரிமையுண்டு.

கணக்கின் கேடான நடத்தை (நடைமுறைக் கணக்கைப் பொறுத்தவரையில், 3க்கு மேற்பட்ட காசோலைகள் கணக்கில் பணம் இல்லாமையினால் திருப்பப்படுதல்) இடம்பெற்றால் அல்லது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டம் மற்றும் காலத்திற்குக் காலம் அமுலிலிருக்கும் பிரமாணங்கள் மீறப்பட்டுள்ளதென வங்கி கருதினால் வங்கியானது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) முன்னறிவித்தல் கொடுக்காமல் தனது சுய

தீர்மானத்தின் பேரில் கணக்கை மூடிவிடும், சில சந்தர்ப்பங்களில், எழுத்துமூல அறிவித்தல் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் கணக்கு வைத்திருப்பவரிடம்/ வைத்திருப்பவர்களிடம் இருந்து விற்றுத் தீர்த்தல் அறிவுறுத்தல் கிடைத்தாலன்றி, வங்கியானது ஏதேனும் அறவீடுகளைச் சேகரிக்க அல்லது கணக்கிலுள்ள மீதியைச் சுவீகரிக்க உரிமை கொண்டுள்ளது.

வங்கிக்கு ஏதேனும் பொறுப்புக்களைக் கொண்ட வாடிக்கையாளர்களின் கணக்குகளை, அப் பொறுப்புக்கள் உண்மையானவையாக அல்லது எதேச்சையாளவையாக, பிரதானமானவையாக அல்லது துணையானவையாக, தனித்தனியானவையாக அல்லது கூட்டானவையாக இருந்தாலும், ஒன்று சேர்த்து அல்லது ஒருங்கிணைத்து, அவற்றிலுள்ள பணத் தொகைகளை அல்லது வேறேதும் கணக்கின் பேரில் வங்கியிடமிருந்து கணக்கு வைப்பாளருக்கு வருமதியாகவுள்ள வேறேதும் பணத் தொகைகளை முன்னறிவித்தல் கொடுக்காமலே எதிரீடு செய்ய அல்லது இடமாற்றம் செய்ய வங்கிக்கு உரிமையுண்டு.

**11.10.** பணம் தூயதாக்கல் தடுப்பு, பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல், தடைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் என்பன தொடர்பில் வங்கிக்கு ஏற்புடைய சட்டங்களுக்குப் பணிந்தொழுக வங்கி தேவைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அத்தகைய சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைவாகச் செயற்படுவது பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளைத் தனது தனி மற்றும் பூரண தற்றுணிப்பிற்கேற்ப மேற்கொள்வதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகளுள், வங்கியின் கணனி அமைப்பின் ஊடாக கணக்கு வைப்பாளரால் அல்லது கணக்கு வைப்பாளருக்கு அல்லது கணக்கு வைப்பாளர் சார்பில் அனுப்பப்படும் ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகளையும் வேறேதும் தகவல்கள் அல்லது தொடர்பாடல்களையும் இடைமறித்து விசாரித்தல், சம்பந்தப்பட்ட ஏதேனும் பெயர் தடைசெய்யப்பட்ட ஒருவரின் அல்லது நிறுவனத்தின் பெயரா என்பதை மேலும் விசாரித்து ஊர்ஜிதம் செய்தல் என்பனவும் உள்ளடங்கும். பின்வருவன தொடர்பில் ஏதேனும் தரப்பினால் உறப்படும் (நேரடியான அல்லது விளைவான மற்றும் இலாப அல்லது வட்டி இழப்பு உள்ளடங்கலான) இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது:

**11.10.1** வங்கி கணக்கு விதிகளின் அல்லது வேறேதும் கடப்பாடுகளின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றும்போது, அத்தகைய சகல சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கும் அமைவாகச் செயற்படுவதற்கு அவசியமென வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளின் முழுமையான அல்லது பகுதியளவிலான காரணத்தினால் ஏற்படும் ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை.

**11.10.2** இச் சரத்தின் கீழ் வங்கியின் ஏதேனும் உரிமைகள் பிரயோகிக்கப்படுதல். சில சந்தர்ப்பங்களில், வங்கியினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை, சில தகவல்களைப் பரிசீலனை செய்வதில் தடையை அல்லது தாமதத்தை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, இச் சரத்தின் பேரில் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு உட்படுகின்ற ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகள் மற்றும் தொடர்பாடல்கள் சம்பந்தமாக வங்கியின் கணனி அமைப்புக்களிலுள்ள தகவல்கள் அணுகப்படும் வேளையில் முற்றிலும் சரியானவையாகவும் மிகப் பிந்தியவையாகவும் இருக்குமென வங்கியினால் உறுதிப்படுத்த முடியாது. மேலாதிக்கம் செய்யும் ஏதேனும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணாகாத வகையில், வங்கியானது சாத்தியமான அளவு விரைவில் அத்தகைய சூழ்நிலை பற்றி கணக்கு வைப்பாளருக்கு அறிவிக்க முயலும்.

**11.11** வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளரின் ஒரு பங்குதாரார் (நேரடி அல்லது நேரடியற்ற, சட்டபூர்வ அல்லது பயனடையும் பங்குதாரராக இருக்கலாம்), கொண்டுவருபவர் பங்குகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாக இருக்கும் பட்சத்தில், வாடிக்கையாளர் தானோ அல்லது அத்தகைய பங்குதாரரோ கொண்டுவருபவர் பங்குகள் எவற்றையும் வழங்கவில்லை என்பதை ஊர்ஜிதம்செய்து உத்தரவாதம் அளிக்க வேண்டும். வங்கிக்கு எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுக்காமல், தானோ அல்லது அத்தகைய பங்குதாரரோ கொண்டுவருபவர் பங்குகளை வழங்கப்போவதில்லை எனவும் தனது அல்லது அத்தகைய பங்குதாரரது பங்குகளை (சந்தர்ப்பத்திற்கேற்ப) கொண்டுவருபவர் பங்குகளாக மாற்றப்போவதில்லை எனவும் உறுதியளித்துப் பொறுப்பேற்க வேண்டும். பங்குகள், கொண்டுவருபவர் பங்குகளாக மாற்றப்படுவதற்கு முன்னர் கணக்கு உறவிலிருந்து வங்கி விலகிவிடும். வங்கிக்கு எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுக்காமல் கொண்டுவருபவர் பங்குகள் வழங்கப்படும் பட்சத்தில், ஏதேனும் கணக்குகளை மூடிவிட வங்கி உரிமை கொண்டுள்ளது.

**11.12** இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள், அப்போது இலங்கைக் குடியரசில் நடைமுறையிருந்த சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும். சட்டத்தினால், அரசாங்கப் பிரமாணங்களினால் அல்லது இலங்கை மத்திய வங்கி அல்லது வேறேதும் சட்டபூர்வ விடுத்த ஏதேனும் அறிவுறுத்துதல்களினால் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுத்தப்படின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தன்னியல்பாகவே திருத்தம் பெறும்.

## 12. விதிகள் மற்றும் நிபந்தனைகள்

**12.1** இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிக்கையின் பிரதான பகுதியில் சேர்க்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், வைத்திருப்பவர்/கள் சகல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளினாலும் முழுமையாகவும் சமமாகவும் பிணிக்கப்படுவார்கள்.

**12.2** இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள், அப்போது நாட்டில் நடைமுறையிலிருந்த சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும். சட்டத்தினால், அரசாங்கப் பிரமாணங்களினால் அல்லது இலங்கை மத்திய வங்கி அல்லது வேறேதும் சட்டபூர்வ விடுத்த ஏதேனும் அறிவுறுத்துதல்களினால் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுத்தப்படின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தன்னியல்பாகவே திருத்தம் பெறும்.

**12.3** கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் முழுமையாகவும் சமமான முறையிலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இந்த விதிகளுக்கான ஏதேனும் திருத்தங்கள் வங்கியின் சகல கிளைகளிலும் சுய சேவை நிலையங்களிலும் உள்ள விளம்பரப் பலகைகளிலும் ஏனைய பொது இடங்களிலும் www.cargillsbank.com என்ற வங்கியின் வலைத்தளத்திலும் பார்வைக்கு வைக்கப்படும் அத்துடன்/அல்லது விபரக்கூற்றுச் செய்தி மூலமும் அறிவிக்கப்படும் இவற்றின் மூலம் கணக்கு வைப்பாளருக்கு/ளுக்கு முறைப்படி அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுவதுடன், அவரை/அவர்களைப் பிணிப்பவையாகவும் அமையும். திருத்தம் செய்யப்பட்ட விதிகளின் பிரதியொன்று தேவைப்பட்டால், கணக்கு வைப்பாளர்(கள்) வங்கியின் கிளையொன்றில் அதனைக் கேட்டுப் பெறலாம்.

கணக்கு ஒன்றை ஆரம்பிக்கும் அல்லது தொடர்ந்து பேணும் எவரும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் பொருத்தமுடைய வேறேதும் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் வாசித்து, விளங்கிக்கொண்டு பணிந்தொழுகுவதற்கு உடன்பட்டு உள்ளவராகக் கருதப்படுவார். கணக்கை/களை ஆரம்பிக்கும்போது, விண்ணப்பப் படிவத்தில் இதற்கான பிரகடனம் ஒன்று செய்யப்பட வேண்டும்.

**12.4** இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் கிடைக்கும். அவற்றிற்கிடையே ஏதாவது முரண்பாடு காணப்படின் ஆங்கில வாசகமே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும்.

**12.5** இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில, சிங்கள, தமிழ் பிரதிகள் வங்கியின் இணையத்தளத்தில் (www.cargillsbank.com) கிடைக்கின்றன. அச்சு வடிவத்தில் அவற்றை வங்கியின் அலுவலகங்களில் அல்லது கிளை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நாம் வழங்கும் சேவைகள் குறித்து உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது அச் சேவைகள் உங்கள் தேவையை ஈடுசெய்யவில்லையெனின், தயவுசெய்து இயன்றளவு விரைவாக பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

- + 94 117 640 000 என்ற வாடிக்கையாளர் தீர்வுகள் ஹொட்லைன் ஊடாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
- customersupport@cargillsbank.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.
- முறைப்பாட்டை எழுதித் தபாலில் அனுப்புங்கள்:-
  செயற்பாடுகள் பிரதானி, கார்கில்ஸ் வங்கி லிமிட்டட், இல. 696, காலி வீதி, கொழும்பு 03.
- நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரவும் முடியும். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:
- நிதித்துறை ஆராட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை, 143 A, வஜிரா வீதி, கொழும்பு 05.
  தொலைபேசி: + 94 112 595 624 தொலைநகல்: + 94 112 595 625
  மின்னஞ்சல்: info@financialombudsman.lk
  இணையத்தளம்: www.financialombudsman.lk

- மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து www.cargillsbank.com என்ற இணையத்தளத்தை நாடவும்.

**13. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை**

வாடிக்கையாளருக்கான ஏதேனும் சேவைகளின் வழங்கலை கார்கில்ஸ் வங்கி முடிவுறுத்தினாலும் வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்கு மூடப்பட்டாலும் அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாமல், இந்த விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

**14. வலுக்கட்டாய நிலை**

வலுக்கட்டாய நிலை நீங்கும் வரை, நாம் ஏதேனும் சேவை வழங்குவதை இடைநிறுத்திவைக்க நேரிடும்.

''வலுக்கட்டாய நிலை'' என்பதில் பின்வருவன உள்ளடங்கும்:

a) வெள்ளம், புயல், பூகம்பம் அல்லது வேறேதும் இயற்கை அனர்த்தங்கள்.

b) யுத்தம், மோதல்கள், பயங்கரவாதம், கிளர்ச்சி அல்லது உள்நாட்டுக் கலகம்.

c) வேலை நிறுத்தம், கதவடைப்பு அல்லது வேறேதும் கைத்தொழில் நடவடிக்கை.

d) சட்டத்தில் ஏதேனும் மாற்றம் அல்லது சட்டத்தின் பொருள் விளக்கத்தில் அல்லது
அமுலாக்கத்தில் ஏதேனும் மாற்றம்.

e) ஏதேனும் அதிகார அமைப்பின் நடவடிக்கை அல்லது கட்டளை.

f) ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது வேறு நியாயஸ்தலத்தின் கட்டளை.

g) கிடைக்கும் தன்மையில் வரையறை அல்லது எதிர்பார்க்கப்படும் வரையறை, ஏதேனும் நாணயத்தின் மாற்றக்கூடிய தன்மை, வரவு வைப்பு அல்லது பரிமாற்றக்கூடிய தன்மை.

h) கணனி கோளாறு அல்லது செயலிழப்பு (காரணம் எதுவாகவும் இருக்கலாம்) அல்லது கணனி அமைப்பில் ஏதேனும் மூன்றாம் தரப்புத் தலையீடு.

i) ஒரு முன்றாம் தரப்பினால் உங்களுக்கு அல்லது எமக்கு வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகளில் தவறு, தோல்வி, துண்டிப்பு, தாமதம் அல்லது கிடையாமை.

j) எமது நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறேதும் நிலைமைகள்.

**15. நொடித்துப்போகும் நடவடிக்கைகள்**

பின்வருவன தொடர்பில் ஏதேனும் நிறுவன நடவடிக்கை, வழக்கு அல்லது வேறேதும் நடவடிக்கையைக் குறிக்கும்:

a) கொடுப்பனவுகளின் இடைநிறுத்தம், கடன்படுகையின் ஒத்திவைப்பு, திவால்நிலை, முடிவுறுத்தல், கலைப்பு, நிர்வாகம் மற்றும் மறுசீரமைப்பு (கடன்தீர்ப்புக்கான கலைப்பு அல்லது மறுசீரமைப்புத் தவிர) அல்லது தொகுப்பு அல்லது கடன் வழங்குநர்களுடனான ஏற்பாடு.

b) உங்கள் அல்லது உங்களுடைய ஏதேனும் சொத்துகள் தொடர்பில் ஒரு கலைப்பாளர் (கடன்தீர்ப்புக்கான கலைப்பு தவிர), பெறுவர், நிர்வாகி அல்லது அது போன்ற ஓர் அலுவலரின் நியமனம்.

c) உங்கள் சொத்துகளில் எதையேனும் பாதிக்கக்கூடிய அபகரிப்பு, இணைப்பு, வரிசைப்படுத்தல், இடுக்கண் அல்லது செயற்படுத்தல், அல்லது உங்கள் சொத்துகள் மீதான ஏதேனும் பிணைப்பொறுப்பின் அமுலாக்கம்; அல்லது

d) ஏதேனும் நியாயாதிக்கத்தில் ஏதேனும் ஒத்த செயன்முறை அல்லது நடவடிக்கை.

**எம்மால் முடிவுறுத்தப்படுதல்:** பின்வரும் சந்தர்ப்பங்களில் நாம் முன்னறிவித்தல் கொடுக்காமலும் உடனடியாகவும் ஒரு சேவையை அல்லது ஒப்பந்தத்தை முழுமையாகவோ அல்லது அதன் ஏதேனுமொரு பகுதியையோ முடிவுறுத்த முடியும்:

a) இந்த ஒப்பந்தத்தின் அல்லது தரப்புகளுக்கு இடையிலான வேறேதும் ஒப்பந்தத்தின் ஏதேனும் விதிமுறை உங்களால் மீறப்படும் பட்சத்தில்.

b) உங்கள் வருமானம் அல்லது அனைத்து அல்லது பகுதியளவு சொத்துகள் தொடர்பில் ஏதேனும் **நொடித்துப்போகும் நடவடிக்கைகள் நடைமுறையில்** இருக்கும் பட்சத்தில்.

c) இந்த ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடுகள் உங்களால் அல்லது எம்மால் நிறைவேற்றப்படுவது சட்டவிரோதமானதாக மாறுதல் அல்லது மாறக்கூடிய சாத்தியம் நிலவும் பட்சத்தில்.

d) இந்த ஒப்பந்தத்திற்கு இணங்கியொழுகுவதால் ஏதேனும் ஒழுங்குபடுத்தல் நிபந்தனையை அல்லது ஏதேனும் அதிகார அமைப்பின் ஏற்புடைய ஏதேனும் கட்டளையை அல்லது தடையுத்தரவை மீற வேண்டிய நிலைமை ஏற்படும் பட்சத்தில்;அல்லது.

e) வழமைக்கு மாறானது என்று நாம் நியாயமான முறையில் கருதக்கூடிய விதத்தில் உங்களை அல்லது சேவையைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை எதுவேனும் நிகழும் பட்சத்தில்.

## 16. செயற்படாத கணக்குகள் - செயலற்ற மற்றும் கைவிடப்பட்ட சொத்துகள்

ஒரு கணக்கு செயற்படுத்தப்படாமல் ''உறக்க'' நிலையில் இருந்தால், வாடிக்கையாளர் அக் கணக்கை மீண்டும் செயற்படுத்தும்படி வேண்டுகோள் விடுப்பதுடன் அவரது தற்போதய விபரங்களையும் (நிறுவனத்தின் விபரங்கள், தொடர்பு விபரங்கள் மற்றும் நிதி விபரங்கள்) சமர்ப்பிக்க வேண்டும்.

கைவிடப்பட்ட சொத்துகள் என்பதில் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குக் கொடுக்கல் வாங்கல் எதுவும் செய்யப்படாதிருக்கும் ஏதேனும் வங்கிக் கணக்கில் (நடைமுறை, சேமிப்பு, நிலையான வைப்பு அல்லது வேறேதும் கணக்கு)

எஞ்சியுள்ள மீதி, ஏதேனும் வங்கி வசதிக்குப் பிணையாக முன்வைக்கப்பட்ட சொத்து தவிர, வாடிக்கையாளரினால் அல்லது வாடிக்கையாளரின் சார்பில் வங்கியில் வைத்திருக்கப்படும் சொத்துகள் (உதா: பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்தில் (SDL)) வைத்திருக்கப்படும் உடைமைகள்) என்பன உள்ளடங்கும்.

ஆண்டுதோறும் ஒவ்வொரு வருடத்தின் முடிவிலிருந்தும் ஆறு மாதங்களுக்குள், அத்தகைய கைவிடப்பட்ட சொத்துகள் பற்றிய அறிக்கை ஒன்றை, நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படும் படிவம் ஒன்றில், இலங்கை மத்திய வங்கிக்கு (CBSL) சமர்ப்பிக்க வங்கி கடமைப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு(CBSL) அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட முப்பது (30) நாட்களுக்குள், அத்தகைய கைவிடப்பட்ட சொத்துகளின் முழுமையான பட்டியல் ஒன்றை வங்கியானது சிங்கள. தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடும். சொத்தின் உரிமையாளரின் பெயரும் சொத்தின் விபரங்களும் இப் பட்டியலில் உள்ளடங்கியிருக்கும்.

அதே சமயத்தில், கைவிடப்பட்ட சொத்துகளின் ஒவ்வொரு உரிமையாளருக்கும் இது சம்பந்தமான அறிவித்தல், அவரின் கடைசியாகத் தெரிந்த முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். கைவிடப்பட்ட சொத்தை மீட்பதற்கு வழங்கப்படும் நியாயமான கால அவகாசம் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வாடிக்கையாளர் முறைப்படியான உரிமைக் கோரல் ஒன்றை விடுத்தாலன்றி, வங்கியானது அதனால் நியாயமானதென்று தீர்மானிக்கப்படும் ஒரு காலத்திற்குள் பின்வருமாறு செய்யும்:

a) எல்லா நாணயங்களிலும் செயலற்ற கணக்குகளிலுள்ள பணத்தை இலங்கை மத்திய வங்கிக்கு (CBSL) இடம்மாற்றும்.
b) பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்தை உடைத்து, அதிலுள்ள பொருள்களை எடுக்கும்.

வாடிக்கையாளர்கள் எந்த நேரத்திலும் தமது அடையாளத்தை நிரூபித்து இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்பட்ட பணத்தைக் கோருவதற்கு உரிமை கொண்டுள்ளனர்.

பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களில் இருந்த பொருள்கள், உரிமையாளர்களினால் முறைப்படி கோரப்படும் வரை அழிக்கப்படாமல் வங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படும்.

கைவிடப்பட்ட சொத்துகளுக்கு உரிமை கோரும் வாடிக்கையாளர்களின் வாரிசுகள் மற்றும் அடுத்துறுநர்கள், தமது உரிமைக் கோரலுக்கு ஆதாரமாக சட்டத்தினால் தேவைப்படுத்தடும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்படி நடைமுறைகள் தொடர்பில் வங்கிக்கு ஏற்படும் செலவுகள் கைவிடப்பட்ட சொத்துகளின் உரிமையாளர்களிடமிருந்து வங்கியினால் அறவிடப்படும்.